**நாவலர்**
**சித்தன்கேணி**
**A/L 90, 91**
**கலை, வர்த்தகம்**
ஆசிரியர் குழு
பொருளியல்: திரு, கலாகரன்
அளவையியல்: திரு. கேசவன்
வர்த்தகம்: திரு, தேவா
கணக்கியல்: திரு.சிறீகாந்தன்
இ. நாகரிகம்; S. அருள்நங்கை
தமிழ்: திரு. கணேஷ்

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 93 புதன் 09-05-1990 (சித்திரை 23) ஷவ்வால் 16

**நாவலர்**
**பண்டத்தரிப்பு**
**ஆண்டு 9, 10 & O/L**
**வகுப்புக்கள்**
கணிதம்: Mr. U, குணம்
விஞ்ஞானம்: Mr. J.R. சூரி
Mr. G. ஈசன்
ஆங்கிலம்: Mr, தெய்வர்
தமிழ்: Mr. கணேஷ்
சமூகக்கல்வி: Mr. செல்வா
வர்த்தகம்: Mr,S.T. குமார்

## தமிழீழ அகதிகளை இலங்கை திருப்பி அழைத்த பின்பே மலையகத் தமிழரை இந்தியா அழைக்கும் - கருணாநிதி

''இலங்கையில் உள்ள இந்திய வம்சா வளித் தோட்டத் தொழிலாளர்களை இப்போதைய நிலையில் தமிழகம் ஏற்றுக் கொள்வது இயலாத காரியம்'' என்று தமிழக முதலமைச்சர் கூறியுள்ளார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு நேற்று சட்டசபையில் பதிலளித்த அவர் இவ்வாறு சொன்னார்.

''இப்போது தமிழகத்துக்கு வந்திருக்கும் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பினால் தான், இலங்கையில் உள்ள இந்திய வம்சா வளியினரை அழைத்துக் கொள்ள முடியும்'' என்று கூறினார்.

தமிழகத்தின் கடல் எல்லையில் கடற்படையும், எல்லைப் பாதுகாப்புப் பிரிவும் நிறுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசைத் தான் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

''திராவிட முன்னேற்றக் கழகமோ, திராவிட கழகமோ தனது தொண்டர்களை வன்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்திக் கொள்ளாது என்று கூறிய; அவர்கள் அப்படிப் பயிற்சி பெற வேண்டிய அவசியமும் இல்லை'' என்றார்

தமிழகக் கடற்பகுதியில் நேரடியாகச் சென்று பார்வையிட்ட பத்திரிகையாளர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் எனது தலைமையில் வரத் தயாராக இருக்கிறார்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# சாம் தம்பிமுத்து கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## ஈ.பி.ஆர்.எல்.எப். எம் மீது பழி சுமத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம் - பாலசிங்கம்

ஈ. பி. ஆர். எல். எப் எம். பி சாம் தம்பிமுத்துவின் கொலைக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக ஈ.' பி. ஆர். எல். எப் தலைவர்கள் சிலர் எம்மீது பழி சுமத்த முயல்வதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்', என்றும் அவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

## ஹமீத் - புலிகள் பேச்சு யாழ்நகரில் நடக்கும்

விடுதலைப் புலிகளுக்கும்-இலங்கை அரசுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

தற்போது வெளிநாடு சென்றுள்ள நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீத் எதிர்வரும் 12-ம் திகதி இலங்கை திரும்பவுள்ளார்.

இலங்கை திரும்பும் அமைச்சர் சில தினங்களில் யாழ்ப்பாணம் வருவார் எனவும் தெரியவருகிறது.

## பத்மநாபாவை சந்திக்க அபுயூசுப் டில்லி பயணம்

மே மாதம் 15 ஆம் திகதி இலங்கை அரசுடன் நடைபெறவிருச்கும் பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக ஈ.பி ஆர்.எல்.எப் தலைமைப்பீடத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக வடக்கு-கிழக்கு மாகாணசபை அமைச்சர் ஜனாப் அபுயூசுப் நேற்று புது டில்லி பயணமானார்.

தற்போது டில்லியில் தங்கி

← 8ஆம் பக்கம் பார்க்க

## விடுதிகள் மீது கவனிப்பு தமிழ் எம்.பிகட்கு பாதுகாப்பு

கொழும்பில் உள்ள தமிழ் எம்.பிகளின் பாதுகாப்பை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதற்கென பொலிஸ்மா அதிபரினால் வகுக்கப்பட்ட பாதுகாப்பு திட்டம் ஒன்றும்

... 8 ம் பக்கம் பார்க்க

## 500 ரூபா போலி நோட்டுக்கள் இந்தியாவிலிருந்து கடத்தல்

இரு மூடைகள் நிறைய போலியான 500 ரூபா நோட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்லுக்கு அருகில் இரு இளைஞர்கள் கைதான போது இக்குட்டு அம்பலமானது. தென்னிந்தியாவிலிருந்து இப்பண நோட்டுக்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. தீவிர வாதக் கோஷ்டி ஒன்றுக்கு ஆயுதங்கள் வாங்குவதற்கே இப்பணம் பயன்

... 8 ஆம் பக்கம் பார்க்க

### 1983 க்குப்பின்னர்

## வடபகுதி ரயில் சேவையில் மதுபான விற்பனை ஆரம்பம்

வடபகுதிக்கான ரயில் சேவையில் மதுபான விற்பனை ஆரம்பிக்கப்பட்டது குறித்து பயணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

1983 ம் ஆண்டிற்குபின்னர் தற்பொழுது தான் இந்த மதுபான விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரவுத் தபால் ரயிலில் மதுபான விற்பனையினால் பலர் சிரமத்தை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.(03)

### முரசொலி ஆதரவில் நடைபெற்ற

## இயல் இசை நாடக அரங்கு போட்டியின் விழா இன்று

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருநெறியதெய்வீக மாநாட்டின் நிறைவு விழாவான இன்று முரசொலி ஆதரவில் பாடசாலைகளிடை நடைபெற்ற இயல் இசை நாடக அரங்கு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு பண்டிதர் ச. சரவணார் பரிசில்கள் வழங்குவார்

முதல் பரிசான ஆயிரம் ரூபாவை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் இரண்டாம் பரிசை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியும் மூன்றாம் பரிசை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் பெறுகின்றன.

## வவுனியா பொலிஸ் நிலையத்தில் தமிழ்-சிங்கள பொலிஸ் சண்டை

(வவுனியா)

வவுனியா பொலிஸ் நிலையத்தில் சில தமிழ் பொலிசாருக்கும் பெரும் பான்மை பொலிஸ் இனத்திற்குமிடையில் இரவு உணவு நேர வேளையில் ஏற்பட்ட ஒரு

— 8 ஆம் பக்கம் பார்க்க

**புத்தகம்**

A/L தாவரவியல், அல்காக்களும் பங்கசுக்களும்-ஓர் அறிமுகம். எழுதியவர் கலாநிதி அ. சிவபாலன் விலை ரூபா 35/- கிடைக்குமிடம், பூபால சிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 05038

## கலை விழா

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடன மாணவியர் ஒன்றியம் நடாத்திய கலை விழா காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரியில் நடைபெற்றது. (ப.10)

## கைப்பணிப் பயிற்சி

(யோகபுரம்)

யோகபுரத்தில் அமைந்துள்ள உழைக்கும் மகளிர் நிறுவனமும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து கைப்பணிப் பயிற்சியினை நடாத்தி வருகின்றன.

30 யுவதிகளுக்கு 3 மாத குறுகிய கால பயிற்சியாக இவை அளிக்கப்படுகிறது.

பயிற்சியாளர்களுக்கு தினமும்ரூபா 20 சப்பளம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்படுகின்றது. (ப. 8)

## கலை மனைப் பொருளியல் கைப்பணி பயனுள்ளவை

''பாடசாலைப்படிப்பை முடித்துவிட்டிருக்கும் யுவதிகளுக்கு மிகப் பயனுள்ள கலை மனைப் பொருளியலும் கைப்பணியுமாகும். தொழிற்றுறை சார்ந்ததாக மட்டுமன்றி நாளாந்த வாழ்க்கையிலும் உதவிசெய்யக் கூடிய கலைகளாக இவை உள்ளன.''

இவ்வாறு இளவாலை வர்த்தகக் கல்லூரியும், மானிப்பாய் பிறைற்றன் அக்கடமியும் இணைந்து நடாத்திய மனைப் பொருளியல், கைப்பணிக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய்ப் பெண்கள் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாண சுந்தரேசன் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பலாலி ஆசிரியர் கலாசாலை உபஅதிபர் திரு. ஆர். எஸ். நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அருட்திரு. கலாநிதி ஞானப்பிரகாசம் அடிகளார் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி அதிபர் திரு.. அ, மு.அருணாசலம் ஆகியோரும் உரையாற்றினர். கண்காட்சியில் பங்குகொண்டவர்களுக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்கினார்.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.(30)

## மின்சாரம் தாக்கி சிறுவன் பலி

வீட்டு மின்சுற்றினுள் கையை வைத்த சிறுவன் பரிதாபமாக மரணத்தை தழுவியுள்ளார்.

இச்சம்பவம் கோண்டாவில் கிழக்கில் இடம் பெற்றுள்ளது செல்வரெட்னம் நோபர்(11) என்ற சிறுவனே இவ்வாறு மரணத்தை தழுவியுள்ளார்

## இலங்கைச் சுங்க அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டம்

# சுங்க விற்பனை 1/90

### பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

விற்பனைக்கான கீழ்வரும் பொருள்கள் பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவகைப் பொருள்களுக்கான கிலோ ஒன்றின் அல்லது பொருள் ஒன்றின் விலைக்கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சுங்க விற்பனை 1/90 எனக்குறிப்பிடப்பட்டிருப்பின் 16.05.1990 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிவரை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இங்ஙனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விகள் 18.05.1990 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வருகை தந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்து பரிசீலிக்கப்படும். வருகை தரமுடியாத கேள்வினர் எழுத்துமூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமுகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதியுயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக் கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப் பொருள்களுக்கான மொத்த விலைத் தொகையை வங்கி உத்தரவாதவோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருள்கள் யாவும் காங்கேயன்துறை இறங்குதுறையிலிருந்து விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி இலக்கம்291 (1984 . 03 . 30) இல் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகின்றது.

| பொருள் விபரம் | தொகை |
|---|---|
| 1. கராம்பு (CLOVES) | 1746.5 கிலோ |
| 2. பழைய செம்புப் பொருள்கள் (COPPER) | 496 கிலோ |
| 3. சாதிக்காய்பூ (NUTMEG FLOWER) | 106 கிலோ |

குறிப்பு; இவை பற்றிய மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுங்க அத்தியட்சகர்**

யாழ். மாவட்ட சுங்கப் பணிப்பாளருக்காக

N/PREV/SALE/90

சுங்க அலுவலகம்,
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1990.05.07 05074

## விவசாயிகளுக்கு கடன் உதவி

(யோகபுரம்)

யோகபுரம் ஆதவன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இப்பகுதி விவசாயிகளின் நன்மை கருதி வெங்காயச் செய்கைக்காக தலா ரூபா 5000/- கடனை வழங்கி வருகிறது.

ஐந்து மாத தவணைக்கு சங்க அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டியுடன் இவை வழங்கப்படுவதாக அதன் செயலாளர் க. ஜீவகாருண்யம் தெரிவித்தார் (ப. 8)

## பெயரில் மட்டும் தான் இவை...

புங்குடுதீவு பகுதிகளிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில் இருக்கும் மலசல கூடங்கள் நல்லமுறையில் இருக்கவில்லை யென தெரிவிக்கப்படுகிறது.

மலசல கூடங்கள் என்ற பெயரளவில் மட்டும் தான் இவற்றைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம் மலசல கூடங்கள் பாவிக்க முடியாத நிலையில் இடிந்தும் கதவுகள் இல்லாமலும் காணப்படுன்கிறன. (20)

## சாவா - மானி வீதி திருத்த வேலை விரைவில்

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த சாவகச்சேரி மானிபாய்வீதி திருத்தவேலைகட்கான நடவடிக்கைகள்மேற் கொள்ளப்பட்டுள்ளன. கோப்பாய்ப் பாலத்துக்கு அருகே பளைப் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கும் யாழ் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கும் எல்லையாக அமைந்து காணப்பட்ட முந்நூறு மீற்றர் வரையுள்ள தூரமே கடுமையாகச் சேதமடைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (23)

உ

சிவமயம்

இலங்கை மெய்கண்டார் ஆதீனம்

## ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

### யாகதீப அழைப்பிதழ்



அன்புடையீர்!

இலங்கை மெய்கண்டார் ஆதீன ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் (தொண்டர்) சமாதியடைந்தமை பற்றிய யாகதீபக் கிரியைகளும் வழிபாடும் நிகழும் பிரமோதூத வருஷம் சித்திரை மாதம் 27 ஆந் திகதி (90.05.1[illegible]) வியாழக்கிழமை நாளை காலை 7 மணி தொடக்கம் கருகம்பனை ஆனந்தவேல் கலைவாணி இல்லத்தில் நடைபெற்று பகல் 11 மணிக்கு கீரிமலை குழந்தைவேல் சமாதிக்கு அருகில் அமைந்துள்ள ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் சமாதியில் பூசை வழிபாடும் மகேசுர பூசையும் நடைபெறும். அன்பர்கள் யாவரையும் இப் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

ஆனந்தவேல் கலைவாணி இல்லம்,
துர்க்கா மில் அருகாமை,
நகுலேஸ்வரம் வீதி,
கருகம்பனை. 05075

## உதவித் தாதியர் பயிற்சிநெறி

## TRAINING FOR NURSES - AIDE

**19-05-1990-இல் ஆரம்பமாகவுள்ளன**

* தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N, O.) விரிவுரைகள் நடாத்தப் படுகின்றன.
* பதினெட்டு மாத கால பாடத்திட்டங்கள்.
* ஆறுமாத கால செய்முறைப் பயிற்சிகள்
* செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ். நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் நடைபெறுகின்றன.
* அரச அங்கீகாரம்பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்,
* பாடத்திட்டங்கள் யாவும் தமிழ்மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
* இலவச ''அக்கு பங்சர்'' பயிற்சிகள்.

ஆண் உதவித்தாதியர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உங்கள் பதிவுகட்கு

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

# சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05078

## அரசியல் பொருளாதார வக்குரோத்து நிலை

உலகின் வளர்ச்சியடைந்துவரும் அல்லது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குள் பதினைந்து நாடுகள் பஞ்சம், பட்டினியை எதிர்கொள்ளும் அபாயம் உருவாகியிருப்பதாகச் சர்வதேச ஆய்வொன்று தெரியப்படுத்துகிறது.

இந்த நாடுகளுக்கு விசேஷமான கவனிப்பு அல்லது அவசர நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிட்ட சர்வதேச நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது.

ஆய்வினை நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ள நிறுவனம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கீழ் இயங்கும் FAO என்று அழைக்கப்படும் உலக உணவு விவசாய நிறுவனமாகும்.

இந்தவகையில் மேற்படி நிறுவனத்தின் அறிக்கை அவசர கவனிப்புக் குரியதாகி உள்ளது.

இவ்விடயத்தில் நாம் அதீத அக்கறை காட்டுவதற்குக் காரணம் என்ன?

குறிப்பிட்ட பஞ்சம், பட்டினியை எதிர்கொள்ளும் நாடுகளில் ஒன்றாக சிறீலங்காவும் சேர்க்கப்பட்டுள்ளதேயாகும். கடந்த பல வருடங்களாக சிறீலங்கா உணவு உற்பத்தியிலும், உற்பத்தித் தன்னிறைவிலும் முன்னணி வகிப்பதாகவே செய்திகள் வெளியாகியுள்ளன.

## இதயநாதம்

புதன்கிழமை 09-05-1990

### நலவாக்கு

நடுவு நிலைமை தவறாதவன், என ஒருவன் தன்னை மதிப்பதே அந்நிலை தவறியதாகும்.
-அமெரிக்கா

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

சரியாகக் கணக்கிட்டுக் கூற முடியாத எத்தனை எத்தனையோ கோடிக்கணக்கானரூபா மகாவலித் திட்டத்திற்குப் பயன்படுதத்ப் பட்டது.

மகாவலிப் பிரதேச விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியவில்லையே என்றுகூட ஆதங்கப்பட்ட அமைச்சர்களின் அறிக்கைகளைப் படித்ததுண்டு.

மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களை ஏமாற்றும் வழியில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றமே இடம்பெற்றது.

இவையெல்லாம் உண்மையானால் உலகின் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குள் பஞ்சம், பட்டினியை எதிர் கொள்ளும் பதினைந்து நாடுகளுள் ஒன்றாக சிறீ லங்காவும் சேர்க்கப்பட்டது எவ்வாறு?

தெற்காசிய நாடுகளில் இரண்டு நாடுகள் மட்டுமே இப்பட்டியலில்சேர்க்கப்பட்டுள்ளன. ஒன்று பங்களாதேஷ் மற்றது சிறீ லங்கா.

பங்களாதேஷ் வறுமை நாடுகளில் ஒன்றாகப் பட்டியலில் இடம் பெற்றமைக்குப் பல காரணங்கள் உண்டு. அரசியல் நிலைமை இயற்கை அழிவு என்று இதற்குப் பல காரணங்களைக் கூறிக் கொண்டே போகலாம்.

ஆனால் பங்களாதேஷுக்கு அடுத்ததாக சிறீ லங்காவும் இந்தப் பட்டியலில் சேரும் போது நாங்களும் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழேதான் வாழுகிறோம் என்பதை இனிமேல் மறைப்பதில் வெட்கப்பட எதுவுமில்லை.

சிறீலங்கா உட்படக் குறிப்பிட்ட பதினைந்து நாடுகளிலும் மிகவும் பயங்கரமான உணவுத் தட்டுப்பாடு ஏற்படப் போவதாக எச்சரித்துள்ள விவசாய நிறுவனம், பஞ்சமும், பட்டினியும் இந்த நாடுகளில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகப் போகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அதே சமயம் உலகின் கைத்தொழில் நாடுகள் வழங்கும் நிவாரண உதவி இவ்வருடம் 3.5 மில்லியன் தொன்களால் குறைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமை இதுவானால், எமது எதிர்காலச் சந்ததியினர் போஷாக்கின்மையால் பலவித நோய்களுக்கும் ஆளாக நேரிடும். கல்வி உயர்வு, பொருளாதார வளர்ச்சி, உற்பத்தித்திறன் ஆகிய அனைத்தையுமே இது பாதிக்கக் கூடும். இவ் விடயத்தில் சிறப்புக் கவனத்தை அரசு இப்போதே செலுத்த வேண்டும்.

# நீங்கள் விரைவில் ஓய்வு பெறப் போகிறீர்களா?

# உங்களுக்கு சில ஆலோசனைகள் இதோ!

**நீங்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னர் முக்கிய நான்கு விடயங்களைப்பற்றி முதலில் சற்றுச் சிந்தியுங்கள். ஓய்வு பெற்ற பின்னர் நீங்கள் வசிக்கப்போகும் இடம், பொருளாதார ஊக்குதவி, காலத்தைப் பயன்படுத்துவது, உடல் நலத்தைப் பாதுகாத்தல் ஆகிய இந்த நான்கு விடயங்களும் உங்களுடைய எஞ்சிய காலத்தை எவ்வாறு நிர்ணயிக்கப்போகின்றன என்பதை இந்தக் கட்டுரை விளக்குகின்றது.**

ஒருவருடைய வயதையும் வருமானத்தையும் பற்றி அவரிடமே நேரடியாக கேட்பது சரியான பண்பாகாது என மேல்நாடுகளில் கருதப்படுகின்றது. ஆனால், நம் நாட்டில் ஒருவரது வயதையும் வருமானத்தையும் பற்றிக் கேட்பது, சாதாரணமாகக் கருதப்படுகின்றது. ஓய்வு பெறப் போகிறவரின் மனநிலையைப் புரிந்துகொள்ளாமல், ஓய்வு பெறப்போவதைக் குறித்து அலட்சியமாகப் பேசுகின்றவர்களும் உண்டு.

வாழ்க்கையில் நாம் எந்த வேலையைச் செய்தாலும், ஒருநாள் நம்பதவியிலிருந்தோ தொழிலிலிருந்தோ ஓய்வு பெறத்தான் போகிறோம். ஓய்வுபெறப் . போகிறவர்கள் நான்கு முக்கிய விஷயங்களைப்பற்றி சிந்திக்கவேண்டும். 1. வசிக்கப்போகும் இடம் 2. பொருளாதார ஊக்குதவி 3. காலத்தை பயன்படுத்துவது 4. உடல் நலத்தைப் பாதுகாத்தல்.

### வசிக்கப்போகும் இடம்

நாம் பிறந்த ஊரை விட்டுச் சென்று, வெகு தூரத்திலுள்ள இடத்தில் வேலை செய்து பின்னர் ஓய்வு பெறப் போகின்றோம். மனதில் எங்கே வசிப்பது என்ற வினா எழுகின்றது. முதலாவதாக, அந்த இடத்தின் வாழ்க்கைச் செலவைக் கவனிக்க வேண்டும்.

பெரிய நகர்ப்புறமாயிருந்தால், நமது ஓய்வூதியம் செலவுக்குப் பற்றாமல் போகலாம், எனவே, சாதாரண வேலையிலிருந்து ஓய்வு பெறுபவர்கள், பெருநகரங்களில் வாழ்வது சிரமத்தைக் கொடுக்கலாம். அதற்காக, எங்காவது தூரம் தொலைவிலுள்ள கிராமங்களில் வாழ்வதும் உசிதமில்லை. பொருட்கள் வாங்கக் கடை வசதி, சிகிச்சை பெற்றுக்கொள்ள மருத்துவ வசதி மற்றும் தொழுவதற்கு ஆலயங்கள் இல்லாத இடங்களில் வசிப்பது கடினம்.

நாம் ஓய்வுபெற்றபின் வசிக்கப்போகும் இடம்நமது நெருங்கிய உறவினர்கள், நமது பிள்ளைகள், பேரன் பேத்திகளை விட்டு வெகு தூரத்தில் இருப்பது உசிதமல்ல. ஏனெனில், வயதுமுதிர்ந்த காலத்தில், நமதுசொந்தபந்தங்கள் தான் நமக்கு மன ஆறுதலைக் கொடுக்க முடியும்.

நமது நெருங்கிய நண்பர்களை விட்டு தூரமாக விலகிப் போவதும் மனமகிழ்ச்சியைத் தராது. நமது உறவினர்கள், குறிப்பாக பிள்ளைகள், பேரக் குழந்தைகளோடு நெருங்கிவாழ வசதியுள்ள இடத்தில் வசிப்பது மன நிறைவைத் தரும்.

நாம் வேலை பார்த்த இடத்திலேயே வகிப்பதும் நல்லதல்ல ஏனெனில் பெரிய பெரிய பதவிகளை வகித்துவிட்டு பின்னர் ஓய்வு பெற்றபின் அந்த இடத்திலேயே வசிப்பது கௌரவப் பிரச்சனையை உருவாக்கலாம். அந்த இடத்திலுள்ள மக்கள் நம்மை மதிப்பார்களோ இல்லையோவென்ற எண்ணம் நமது உணர்ச்சிகளைப் பாதிக்கலாம்.

### பொருளாதார ஊக்குதவி

ஓய்வு பெற்றபின் நாம் பெறும் ஓய்வூதியம் இதுவரை பெற்றுவந்த ஊதியத்தை விடக் குறைவாகவேயிருக்கும் எனவே, ஓய்வுபெற முன்னரே நமது வரவு செலவுகளைத் திட்டப்படுத்திக் கொள்வது நல்லது. குடும்பம் சம்பந்தப்பட்ட காரியங்களையும் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனது நண்பர் ஒருவர்ஓய்வு பெறும் போது ஒருபையனுக்கும் பெண்ணிற்கும் திருமணம் செய்துமுடித்தார். இன்னும் தமது இரண்டு பெண்களுக்கு திருமணம் முடிக்கவேண்டியிருந்தது. ஒரு பையன் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவர் தமது 45 வது வயதில் பையனைப்பெற்றிருந்தார்! முற்காலத்தில் எத்தனை பிள்ளைகள் வேண்டுமானாலும் பெறலாம், எந்த வயதிலும் பெற்றுக் கொள்ளலாம். அது குறித்து யாரும் கவலைப்படவில்லை.

குழந்தைகள் பிறக்கும், இறக்கும். அன்று மனிதனின் தேவைகள் மிகக் குறைவு. குழந்தைகள் வீட்டிலுள்ள எதையாவது தின்றுவிட்டு கோவணம் கட்டியவண்ணம் தெருக்களில் விளையாடிக் கொண்டிருக்கும். ஆனால் இன்றைய சூழ்நிலையோ வேறு. வாழ்க்கை முறையே மாறிவிட்டது. எல்லோரும் மேல்படிப்பு படிக்கும், படிக்க விரும்பும் காலம். எனவே, நிறையக் குழந்தைகள் இருந்தால், அவர்களைச் சீராக வளர்க்க முடியாது என்ற உண்மையை எல்லோருமே உணர்ந்திருக்கிறோம். எனவே தான், அளவோடு பெற்று வளமோடு வாழ நினைக்கின்றோம்.

### காலத்தை பயன்படுத்துவது

பணி ஓய்வு காலத்தில் நேரத்தை எப்படிக் கழிப்பது என்பது ஒரு பெரிய பிரச்சனையாகும். ஏறத்தாழ முப்பது முப்பத்தைந்து ஆண்டு காலமாக நேரப்படி அலுவலகம் சென்று வேலைபார்த்துவிட்டு திரும்பியவருக்கு வேலை என்று ஒன்று இல்லாவிட்டால், அந்தநேரத்தை எப்படிச் செலவிடுவது என்பது பெரும் பிரைச்சனையாகிவிடுகிறது. பொதுவா, காலையில் எழுந்தவுடன் சூடான பானம் ஏதாவது ஒன்றை அருந்திவிட்டு, அன்றைய செய்தித்தாளைப் படிப்பது, பிறகு கொஞ்சத்தூரம் நடந்து சென்று கடைகளில் சாமான்கள் காய்கறிகள் வாங்கி வருவது, காலைஉணவை அருந்திவிட்டு நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்கள் படிப்பது மதியஉணவிற்குப் பிறகு ஒரு குட்டித் தூக்கம், பின்னர் மாலையில் சூடான பானம் ஏதாவதுஒன்றைஅருந்திவிட்டு பூங்கா வரைக்கும் ஒரு நடை அல்லது கோயில் குளங்களுக்குச் செல்வது, இரவு படக்காட்சி அல்லது ரி. வி, பார்ப்பது. இவ்வாறாக வாழ்க்கை கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் வாழ்வது நன்றாக இருக்காது. வேலை செய்யாமல் ஓய்வாக இருப்பது மனமகிழ்ச்சியைத் தராது.

வேலை செய்து அதன் பயனை அனுபவிப்பதுதான் மகிழ்ச்சியைத் தரும். எனவே ஓய்வுபெற்ற பிறகும் ஏதாவது வேலை செய்ய வேண்டும். அதன் மூலமாகக் கிடைக்கும் சிறு வருமானம் நம்மை மகிழ்வுறச் செய்யும்.

### உடல் நலத்தை பாதுகாத்தல்

ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள னேண்டும். உண்ணும் உணவு பற்றியும் செய்யவேண்டிய உடற்பயிற்சிகள் பற்றியும் மருத்துவரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு நல்ல உடல்நலம் மிகவும் அவசியம். அன்றாடம் வயதிற்குத் தகுந்தபடி உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது உடலை நலமுடன் காக்க உதவும்.

பணியின்று ஓய்வு பெற்று புது (!) வாழ்க்கையில் ஈடுபடுவது திடீரென்று ஏற்படாமல் படிப்படியாக அமையவேண்டும். திடீர் மாற்றங்கள் நமது உடலலையும் உள்ளத்தையும் பாதிக்கலாம்.

எனவே, ஓய்வு பெறுவது வாழ்க்கையின் இயல்பான மாற்றமாக இருக்க வேண்டியது அவசியம். பணி ஓய்வு பெற்றவுடன் வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ளத்தக்கதாக கீழ்கண்ட முக்கியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டும்,

1, ஆக்கபூர்வமான, பிறருக்கு நன்மை விளைவிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுங்கள், இத்தகைய செயல்கள் நமக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றன. எழுத்துவேலைநமக்கு பொழுதுபோக்காகவும் வருமானத்தைத் தரக்கூடியதாகவும் இருக்கும், இன்னும் இது போன்ற மக்களால் பாராட்டப்படக்கூடிய சேவைகளில் ஈடுபடலாம்,

2, வாழ்க்கையை ஆர்வத்தோடு அணுகுங்கள் ஆர்வம் நமது வாழ்க்கைகை மகிழ்ச்சியுடையதாக்குகிறது.

3. உங்களுக்கு மனநிறைவு தரும் வேலையில் ஈடுபடுங்கள் ஈடுபடும் வேலையை நன்றாகச்செய்யுங்கள்,

4, இளைஞர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களது செயல்களில் ஈடுபாடுகொண்டு அவர்களுடன் சேர்ந்து செயலாற்றுங்கள்.

5. நல்லமுறையில் பொழுகைப் போக்குவதற்கான வேலைகளில் ஈடுபடுங்கள். தோட்டவேலை, படம்வரைதல், தபால் தலைகள் சேர்த்தல், தேனீ வளர்த்தல், கோழிவளர்த்தல் மற்றும் இதுபோன்ற ஓய்வுநேரவேலைகள் நமது வாழ்க்கைக்கு மெருகூட்டுவதுடன் வருமானத்தையும் தருகின்றன.

6, 'எல்லாம் நன்மைக்கே' என்ற கொள்கையுடன் வாழுங்கள், எதையும் குறை கூறிக் கொண்டேயிருப்பது நன்மை பயக்காது.

7. எல்லாவற்றிகும் மேலாக இறைவன் மீது நம்பிக்கை உடையவராக வாழுங்கள். இறைவழிபாடு நமக்கு நிம்மதி தருவதுடன் புத்துணர்ச்சியை ஊட்டுகிறது.

# செய்தி மஞ்சரி

## மின்கட்டணத்தில் தவறு

பாவனையாளர்களிடம் இருந்து மின்சார நிலுவைக் கட்டணங்களை துரித கதியில் அறவிடுமாறு உலக வங்கி இலங்கை மின்சார சபைக்கு அறிவுறித்தியதை அடுத்து

இதேவேளை இலங்கை மின்சாரசபையினால் பாவனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிவப்பு நோட்டீசில் பிழையான கட்டணத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதால் பாவனையாளர்கள் பெரிதும் டாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டதெனினும் சிவப்பு நோட்டீஸ் குறிக்கப்பட்டுள்ள கட்டணத்தை முதலில் செலுத்தும்படியும் பின்னர் பிழைகளை திருத்திக் கொள்ளலாம், எனவும் மின்சார சபை கூறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இடமாற்றம் இனி புதியதிட்டப்படி

மாவட்ட அடிப்படையில் நியமனம்பெற்ற வடக்கு-கிழக்கு மாகாணத்து ஆசிரியர்கள் உடனடியாக இப்போது கடமை புரியும் மாவட்டத்திலிருந்து வேறுமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்து சனிக்கிழமை முதன் முறையாகக் கூடிய வடக்கு கிழக்கு மாகாண இடமாற்றச் சபையின் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் மாவட்ட சேவைத்திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 5 வருட சேவையை பூர்த்தி செய்தவர்களை யாழ் மாவட்டத்திற்கும் 4 வருடம் பூர்த்தி செய்தவர்களை ஏனைய மாவட்டங்களுக்கும் இரண்டாம் தவணை முடிவில் இடமாற்றம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பயிலுநர்களுக்குச் சம்பளம்

பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான முதற் கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இச் சம்பளம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிலுநர் ஆசிரியர்களும் பிறப்பத்தாட்சிப் பத்திரங்களையும், திரும்ணமானவராயின் திருமண அத்தாட்சிப் பத்திரத்தை. யும் சமர்ப்பிக்கப் பட வேண்டும் என யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## இலங்கையராக்கக் கோரிக்கை

இந்திய கடவுச் சீட்டுக்களை எடுத்து வைத்திருக்கும் 80 ஆயிரம் பேரையும் இலங்கை நாட்டுப் பிரஜைகளாக்க வேண்டும் என்ற கோரிக்கையினை தொழிலாளர் விவசாய விடுதலை முன்னணி அரசுக்கு விடுத்துள்ளது.

## கிளிநோச்சி மேன் முறையீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் தெரிவில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றிய மீள் பரிசீலனை வேலைகள் இந்த வாரம் கல்வித்திணைக்கள குழு ஒன்றினால் மேற் கொள்ளப்படவுள்ளது.

இதுவரை 22 மேன்முறையீடுகள் கிடைக்கப்பட்டன. என்றும் அவை முதலில் பரிசீலனைக்கு எடுக்கப்படும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாமதம் இனி இல்லை

ஓய்வூதியம் வழங்குவதற்கு மாதம் தோறும் குறிப்பிடப்படும் தினத்தில் யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுவதிலை என்ற முறைப்பாட்டை அடுத்து யாழ் மாவட்ட ஒய்வூதியக் காரர்களுக்கு குறிப்பிட்ட தினத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஒய்வூதியத்திற்குப் பொறுப்பான பிரதி நிதிப்பணிப்பாளர் திரு. பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கான ஓய்வூதியம் எதிர்வரும் 11ம் திகதி வழங்கப்பட இருக்கிறது. ஓய்வூதிய வவுச்சர்களையும், பணத்தையும் எடுத்து வங்கிகளுக்கு அனுப்பவும் வேலை ஆரம்பமாகியுள்ளன.

## தென்பகுதியில் மீண்டும்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல பிரதான இடதுசாரி அரசியல் கட்சிகள் மற்றும் ஒரு மேதினக்கூட்டத்தை தென்பகுதியில் நடந்தத் தீர்மானித்துள்ளன. இது தொடர்பாகப் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தீவிர வாதத்தை எதிர்த்தல் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் ஜனநாயகத்தை மீண்டும் நிலைபெறச் செய்தல் போன்றவற்றைக் கோரியே இம் மேதினக்கூட்டம் வெசாக் கொண்டாட்டத்திற்குப் பின்னர் நடத்தப்படும்.

## சுகாதார அமைச்சு தீர்மானம்

உதவி வைத்திய அதிகாரிகள் (ஏ.எம்.பி) இனிமேல் பரீட்சைக்கு தோற்றாது பதிவு செய்த கொள்ள முடியும் என அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி வைத்திய அதிகாரிகள் (ஏ.எம்.பி)பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் (ஆர்.எம்.பி) தொடர்பான விடயங்களை ஆராய சுகாதார அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்த குழு பல சிபார்சுகளைத் அரசங்சாகத்துக்கு தெரிவுத்துள்ளது.

### பிச்சைக்காரரற்ற சமூகம் உருவாக்கும் திட்டம்

# மட்டு-யாழ் நீங்கலாக கைது நடவடிக்கை நீடிப்பு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 23 ஆயிரத்துக்கும் அதிகமான பிச்சைக்காரர்கள் உள்ளனர்.

அண்மையில் சமூக சேவைகள் அமைச்சு நடத்திய மதிப்பீடு ஒன்றிலிருந்து இவ் விபரம் தெரிபவந்துள்ளது.

இந்த மதிப்பீட்டை அடுத்து பிச்சைகாரர்களைக் கைது செய்து மறுவாழ்வு அளிக்கும் வேலைத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவது என திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கொழும்புப் பகுதியில் மாத்திரம மூவாயிரத்துக்கும் அதிகமான பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

மறுவாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் சமூக சேவைகள் ராஜங்க அமைச்சர் திருமதி சந்த கருணரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்.

பிடிக்கப்பட்டிருக்கும் பெண் பிச்சைக்காரர்கள் தங்கொடவில மறுவாழ்வுப் பகுதியிலும் ஏனையோர் ரிதியகம முகாமிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தகுந்த தொழிற் பயிற்சியோடு வேலைவாய்ப்புகளை அளிக்கவும் தேவையான காணி, வீட்டு வசதிகளை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

கைது செய்யப்பட்டோரிடையே காணப்படும் பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகள் அளிக்கப்படும்.

கண்டி, கதிர்காமம், அனுராதபுரம் பகுதிகளிலுள்ள பிச்சைக்கரர்கள் விரைவில் கைது செய்யப்படுவர்.

இலங்கையில் பிச்சைக்காரர்களற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் கைதாகும் வயோதிபர்கள் வயோதிபர் இல்லங்களுக்கு அனுப்பப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### காரைநகரில்...

காரைநகர் மருதடி அருள் மிகு வீரகத்தி விநாயகர்ஆலய மகோற்சவம் இன்று 9-ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 17-ம் திகதிவியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இவ்வாலயத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 16-ம் திகதி புதன்கிழமை நடைபெற்று இவ் வருடத் தேர்த் திருலிழாவன்று விநாயகப் பெருமான் புதியதேரில் வீதிஉலா வருவார்.

### நல்லூர்தெற்கில்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 4 வது ஆண்டு நிறைவு விழா இன்று காலை மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு 5மையில் மரதன் ஓட்டப்போட்டி விளையாட்டுப் போட்டி வினோத உடைப் போட்டி முதலியனவும் இடம்பெறும்

இரவு நிகழ்ச்சிகளாக பெண்களின் கலியுக விசித்திரங்கள் என்னும் வில்லுப்பாட்டும் எங்கண் தவப்பயன் வீரத்தாய் அரிசந்திரா ஆகிய மூன்று நாடகங்களும் நடைபெறும்.

### யாழ் நகரில்

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரைப் பூரணை விழாவும் கணக்கறிக்கை சமர்ப்பண நிகழ்ச்சியும் இன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

இவ்வருடம் முதலாவது கணக்கறிக்கை சமர்ப்பண நிகழ்ச்சி நடை பெறுவதனை முன்விட்டு விசேட நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. இந்நிகழ்ச்சியில்பல பெரியார்கள் உரையாற்றவுள்ளார்கள்

### சண்டிலிப்பாயில்

இன்று 9ம் திகதிபுதன் கிழமை சண்டிலிப்பாய் சிறீநாபூசணி அம்பாள்தேவஸ்தான இரதோற்சவம் நடைபெறவுள்ளது.

9மணிக்கு வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து அம்பாள் தேருக்கு எழுந்தருளுவார் அன்று மாலை தீர்த்தோற்சவம் நடைபெறும்.(30

### இரணைமடுவில்

இரணைமடு சிறீ கனகாம்பிகை அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் இன்று காலை 6மணிக்கு திருவையாறு முதலாம்பகுதி இரத்தினபுரம் மக்களின் உபயமாகவும் நாளை இரவு பூங்காவனமும் பகல் சங்காபிஷேகமும் கனகாம்பிகைக் குளமக்களாலும் செய்யப்படவுள்ளது.

இரவு திருவிழா 10மணிக்கு முடிவதை முன்னிட்டு போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

### செஞ்சிலுவைச் சங்க

## சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(தாளையடி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தின் விளையாட்டுத்துறையின் உதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்றுநடாத்தப்பட்ட போட்டிகளில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு, 50 மைல் சைக்கிள் ஓட்டம் ஆண்கள்: 1 ம் இடம் வை.கயிலநாதன் சங்கானை, 2 ம் இடம் எஸ்.சிற்பவானந்தன் தெல்லிப்பழை, 3 ம் இடம் எஸ். தூரைமணி யாழ்ப்பாணம், 4 ம் இடம் ஐ.வினாயகமூர்த்தி சாவகச்சேரி.

15 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்கள்: 1 ம் இடம் செல்வி தி.சுயித்தா சண்டிலிப்பாய், 2 ம் இடம் என். இராசமலர் சாவகச்சேரி, 3 ம் இடம் க. ஞானகௌரி சாவகச்சேரி, 4 ம் இடம் பீ. சிவலக்சுமி கோப்பாய், 5 ம் இடம் லதா மேரி யாழ்ப்பாணம், 6 ம் இடம் வ. மஞ்சுளா தேவி சாவகச்சேரி.

மரதன் ஓட்டம் ஆண்கள்: 1 ம் இடம் கி. உதயகுமார் கோப்பாய், 2 ம் இடம் க. சண்முகம்பிள்ளை வேலணை, 3 ம் இடம் வே. ஆன்சலம் யாழ்ப்பாணம், 4 ம் இடம் க.பிரபாகரன் சங்கானை, 5 ம் இடம் தா.யூட் வேலணை

மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம்: 1 ம் இடம் நா.சந்திரன் ஈச்சமோட்டை யாழ்ப்பாணம், 2 ம் இடம் ஏ.குணசிங்கம் கில்னர் கட்டடம் யாழ்ப்பாணம், 3 ம் இடம் ஆர்.கோபால் கில்னர் கட்டடம் யாழ்ப்பாணம்,4 ம் இடம் இ.தங்கேஸ்வரன் சுப்பர்மடம், பருத்தித்துறை, 5 ம் இடம் ஜனாப் இ. அப்துல் மாலிக் யாழ்ப்பாணம். (18

### சேர் பொன்னம்பலம் ஞாபகார்த்த

## அரும் பொருட்காட்சி நிலையம் மருதனாமடத்தில் அமையும்

(மானிப்பாய்)

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு அரும் பொருட்காட்சி நிலையம் மருதனாமடம் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் எதிர் வரும் 19 ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிலையத்தை அமைப்பது தொடர்பான குழு ஒன்று மருதனாமடம் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. குலசேகரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்தில் சேர் பொன் இராமநாதன் சம்பதப்பட்ட ஆக்க பூர்வமான நூல்களையும், அவர் உபயோகித்த பொருட்கள், ஏடுகள், ஆவணங்கள் என்பவற்றையும் பேணி வைத்திருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றினை யாராவது வைத்திருப்பின் மருதனாமடம் கல்விக் கோட்டத்தில் 15 ம் திகதிக்கு முன் கொடுத்துதவுமாறு அமைப்புக் குழு கேட்டுள்ளது.

அத்துடன் விஞ்ஞான மாணவர்களுக்கு மிகவும் பயன்தர கூடியதான தாவரவியல் பூங்கா ஒன்றினையும் 19 ம் திகதி ஆரம்பிக்க மருதனாமடம் கல்விக் கோட்டத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அன்றையதினம் மருதனாமடம் கல்விக் கோட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டு பூர்த்தி நாள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## இலக்கண வித்தகருக்குப் பாராட்டு

இலக்கண வித்தகர் பண்டிதர்இ. நமசிவாய தேசிகர் அவர்களின் பண்பு பாராட்டிப் பொன்னாடை போர்த்தும் விழா இம் மாதம் பதினொராம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு மயிலங்கூடல் ஞான வைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்பெரியார் மு.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் அறிஞர் பலர் சொற்பொழிவு வாற்ற உள் ளனர்.

### நீறுபூத்த நெருப்பாயிருந்த வேறுபாடு வெடித்தது

# மக்கள் கட்சியிலிருந்து சந்திரிகா விலக்கப்படுவார்

இலங்கை மக்கள் கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமரணதுங்க கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவார்.

இவ்வாறு இலங்கை மக்கள் கட்சியின் அரசில் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு. ஓஸி அபேகுணசேகர தலைமையில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க உட்பட மாகாண சபை உறுப்பினர்கள் 12 பேரையும் கட்சியிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் கொள்கைகளை விமர்சித்துக் கட்சி நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்திக் கட்சியின் நடவடிக்கைகளை விடுத்து மற்றைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்தை நடத்த ஆயத்தமாதல் போன்ற நடவடிக்கைகளினால் இவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் திருமதி சந்திரிகா குமபரணதுங்க கடந்த வாரம் லண்டன் பயணமானார்.

## நம்மைச் சுற்றி நடப்பவை

நேற்றுக்காலை அலுவலகத்திற்கு வந்த எம்மை மாணவர் படையொன்று வரவேற்றது.

'நேற்று பட்டினி போட்டு விட்டார்கள் இன்று என்ன செய்கிறார்களோ தெரியாது...... என ஒரு மாணவன் கதையைத் தொடங்கினார்.

'ஒருவருக்கு மூன்று ரூபா ஒதுக்கி சத்துணவு கொடுங்கள் என அதிகாரிகள் சொல்லுகிறார்கள்...... ஆனால் இவர்கள் இங்கு வெறும் பிஸ்கட்டுடன் சமாளிக்கப் பார்க்கிறார்கள்' என மற்றொரு மாணவர் பொரிந்து தள்ளினார்.

இவர்கள் அனைவரும் யாழ் நகரிலுள்ள ஒரு பிரபல இந்து ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். கடந்த திங்கட்கிழமை நண்பகல் மதிய உணவு வேளையில் இவர்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. பின்னர் அதனையடுத்து வரும் பாடவேளை ஒன்றின் போது ஒவ்வொரு மாணவனுக்கும் மதிய உணவுக்குப் பதிலாக ஆறு மெலிபன் பிஸ்கட்டுகள் மட்டுமே வழங்கப்பட்டனவாம்.

இதனால் பசியும் தீரவில்லை...... ஒரு பாட நேரமும் வீணாகப் போய் விட்டது... இதுவே அந்த மாணவர்களின் மனக்குமுறல்.

யாழ். கல்விப்பணிப்பாளருக்கு இது சமர்ப்பணம்.

★ கிறிசன்

## தெரிவானோருக்கு வீடமைப்பு விண்ணப்பப்படிவம்

(தாளையடி)

பதினைந்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய மீளமைப்பு கடன் பெறுநர்களைத் பதிவு செய்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்குரியவிண்ணப்பப்படிவங்கள்இம் மாதம் பதினான்காம் திகதி தொடக்கம் பதினாறாம் திகதி வரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அலுவலகத்தில் வைத்து சுண்டிக்குளம் தொடக்கம் செம்பியன்பற்று தெற்கு கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ளவர்களுககு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பிரிவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீடமைப்பு உத்தியோகத்தர் என். சிவஞானசேகரம் செய்துவருகின்றார். (18).

## அதிபர் ஓய்வு பெறுகிறார்

(சங்கானை)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தே. தம்பிராசா ஓய்வு பெறவுள்ளார்.

இவர் இக் கல்லூரியில் மூன்று வருட காலம் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இவர் 13 வருட காலம் உதவி அதிபராகக் கடமையாற்றினார் (13)

## மண்முனை-கொக்கட்டிச் சோலை படகுச் சேவை நேரம் நீடிப்பு

(மட்டக்களப்பு)

மண்முனை- கொக்கட்டிச் சோலை படகு சேவை இரவு 7.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்படகு சேவை மாலை 6.00 மணியுடன், நிறுத்தப்பட்டது. இதனால் மட்டக்களப்பு நகரிலிருந்து செல்லும் அலுவலக ஊழியர்கள் உட்பட பலரும் கொக்கட்டிச்சோலை, முறைக்காடு, அரசடித்தீவு ஆகிய பகுதிகளுக்கு தமது பிரயாணங்களை தொடரமுடியாத கஷ்ட நிலைமை ஏற்பட்டது.

தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள படகு சேவை நீடிப்பு பொது மக்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## யாழ்.நிர்வாக சேவையில் புதிய மாற்றங்கள் அமுல்

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. ப. சண்முகநாதன் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

செயலக தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபராகச் சங்கானை உதவி அரச்சாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் நியமிக்கப்படலாமென செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. யாழ். மாவட்டத்தில் பணி புரியும் 33 உதவி அரச அதிபர்களில் இவரே சிரேஷ்ட அதிகாரியெனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## பாதை திருத்தம்

(மூளாய்)

சுழிபுரம் பிரசே சபையின் உப அலுவலகங்களான சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி ஆகிய இடங்களில் 1989-ம் ஆண்டிற்கான சமூக நிதியிலிருந்து வழக்கம்பரை — களனை ஒழுங்கை, இறாத்தலடி சந்தை ஒழுங்கை, கள்ளி ஒழுங்கை, அராலி அம்மன் கோவில் முன் ஒழுங்கை, வேப்பிலைக் கிணறு ஆகியவற்றின் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைகள் சனசமூக நிலையங்கள் மூலமாக ஒரு இலட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டது. (ப 1)

## சர்வோதய தலைவர் ஆரியரத்தின வவுனியா பாதயாத்திரையில்

சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தின எதிர் வரும் 10ம் திகதி வியாழக்கிழமை வவுனியா வருகின்றார்.

இத்தினத்தன்று வவுனியாவில் இடம் பெறவுள்ள சமாதான பாதயாத்திரையில் இவர் கலந்து கொள்வார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர் இங்குள்ள இந்து, பௌத்த, கத்தோலிக்க இஸ்லாம் மத பெரியார்களின் சமாதான செய்தி ஒன்றும் மகாவித்தியாலயத்தில் இடம் பெறும் கூட்டத்தில் தனித்தனியாக வெளியிடப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (11)

## ஞானவைரவர் சங்காபிஷேகம்

மயிலங்கூடல் அருள்மிகு ஞான வைரவர் தேவஸ்தான நவோத்தர சத சகஸ்ர சங்காபிஷேகம் இம் மாதம் பதினொராம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது,

## ஊழியர் இல்லை; வேலை பாதிப்பு

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபரினது காரியாலயத்தில் எழுதுவினைஞரினது தட்டுப்பாடும் தமிழ் தட்டச்சாளரின் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன, இதனால் வேலணைப் பகுதி மக்களுக்கு கொடுக்கப்படவேண்டிய புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன. (19)

# கிழக்குச் செய்திகள்

## கெவிலியாமடு சிங்கள பாடசாலை

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கெவிலியாமடுவில் சிங்களப் பாடசாலை நிர்மாணிப்புப் பணி வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இப்பகுதியில் சிங்களக் குடியேற்ற முயற்சிகள் காரணமாக தமிழ்க் கிராம வாசிகள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## சம்பளத்திற்கு ஏற்பாடு

பயிலுநர் ஆரிரியர்களுககு சுய விவரச் சேவையைத் தயாரித்து தாமதிக்காது இவர்களுக்குச் சம்பளம் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு, கே. தியாகராஜா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான விவரணக் கடிதத்தை கல்விப் பணிப்பாளர் திருகோணமலை, மூதூர், கந்தளாய் முதலான உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்,

திருகோணமலை மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் நியமனம் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டது.

இதுவரை இவ்வாசிரியர்களுக்கு சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## மதுறுஓயா முஸ்லிம் பாடசாலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுறு ஓயாப் பிரதேசத்தில் திதிதென்ன முஸ்லிம் வித்தியாலயம் என்றபாடசாலை முதன் முதலாகத் திறந்து வைக்கப்பட்டது.

இக் கிராமத்தில் 125 முஸ்லிம்கள் 'காணி பெற்றுள்ளனர்.

## நிந்தவூரில் அம்புலன்ஸ் இல்லை

நிந்தவூர் அரசினர் ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி இல்லாமையால் அவசர நோயாளர்கள் அம்பாறை, கல்முனை மட்டக்களப்பு போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைப்பதில் பல சிரமங்கனை வைத்திய அதிகாரிகள் எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் வறிய மக்கள தனியார் வாகனங்களுக்கு கூடிய தொகை கொடுத்து நோயாளர்களை எடுத்துச் செல்ல வேண்டிய பரிதாபத்திற்கும் அடிக்கடி ஆளாகின்றனர்.

## பட்டியல் பார்வைக்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களின் பெயர் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுதோறும் வைக்கப்படவுள்ளது.

தகுதி இல்லாதவர்கள் நிவாரணம் பெறுவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகுதி இல்லாதவர்கள் காண்ப்பட்டால் பொதுமக்கள் தமது ஆட்சேபனையை ஒருவார காலத்திற்குள் தெரிவித்தல் வேண்டும். இதன் பின்னரே தகுதியானவர்கள் குறித்து இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும்,

## பொத்துவில் கடலில் எண்ணை

பொத்துவில் அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள கோமாரிக் கிராம கடற் பரப்பில் இரண்டு மைல் தொலைவு வரைக்கும் கடல் நீர் எண்ணைக் கசிவு உள்ள நீராக காணப்படுகின்றதெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அலைகள் மூலம் எண்ணை கரையை வந்தடைவதால் கடல் மண்ணில் படிவுகள் காணப்படுகின்றது.

பகல் 10மணிக்கு மேல் யாரும் நடந்து செல்ல முடியாதளவு மண் ஒரே சூடாக இருக்கின்றது.

இதனால் இப்பகுதிமீனவர்இக்கிராமத்திலிருந்து மீன்பிடிக்கச் செல்வதை நிறுத்தியுள்ளனர்.

எண்ணைத் தாங்கிக் கப்பல்களிலிருந்து இந்த எண்ணை கசிந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

## தொலைபேசிதொடர்புதுண்டிப்பு

தொலைத் தொடர்புகள் திணைக்களத்திற்கு செலுத்தப்படவேண்டிய தொலைபேசிக் கட்டணம், வாடகை என்பன செலுத்தப்படாத காரணத்தால் மட்டக்களப்பு இ.போ.ச டிப்போவின் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 269 ரூபா 95 சதத்தை மட்டக்களப்பு இ.போ.ச நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளதாக தொலைத் தொடர்புகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அக்கரைப்பற்று-கல்முனைபஸ்சேவை

அக்கரைப்பற்று கல்முனை பஸ் சேவை கடந்த மூன்று மாத காலமாக சீரற்றமுறையில் செயற்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஒரு பஸ் சேவைக்கு விடப்பட்ட ஒரு மணி நேரத்தின் பின்னரே மற்ற பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது,

இதனால் பிரயாண வசதிகளின்றி மக்கள் உழவு இயந்திரங்களில் தொத்திக்கொண்டு பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.


## முரசொலிக்கு வந்த கடிதம்

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் தரும் விளக்கம் இது

ஆசிரியர்
முரசொலி

01.05.1990 இல் திரு. என் சோமசுந்தரம் அவர்களால் ,முரசொலிக்கு வந்தகடிதம்' பகுதியில் எழுதப்தப்பட்ட கடிதம் சார்பாக யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் பின்வரும் இணக்கத்தினையும் பிரசுரிக்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கிறது.

1949 ஆம் ஆண்டில் உதயமான யாழ் உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் முதலாவது தலைவர் அப்போதைய மாவட்ட நீதிபதி திரு. எம். சிறிஸ்கந்தராசா என தெரியப் படுத்த விரும்புகிறோம் அல்லாமல் திரு. சோமசுந்தரம் கூறியிருப்பது போல் திரு. ஸ்பென்சர் அல்ல.


The adjourned meeting was held at 6.30 pm on 21.11.49 at the Co-operative Department Sports Club premises at 3rd Cross Street Jaffna.
The house then proceeded to the electing of office bearers and the following office bearers were elected.
President Mr P Sreeskandarajah
Vice President (1) Mr W.G. Spencer
(2) Mr G.R. Motha.
Secretary & Treasurer Mr Subramaniam

சங்கத்தின் முதலாவது நிர்வாக சபையில் இருந்து எடுக்கப்பட்ட பிரதியில் இது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பகுதியை இங்கு நீங்கள் காணலாம்.

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் 13.9.76 இல் அனுப்பிவைத்த சுற்று நிருபத்தின்படியும் 5.12.1979இல் அனுப்பி வைத்த சுற்று நிருபத்தின்படியும் மாவட்டத்தில் உள்ள லீக்குகளின்கீழ் மத்தியஸ்தர் சங்கங்கள் இணையவேண்டும் என்பதற்கு இணங்க 1949 இல் ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தின் தொடர்ச்சியாக எமது சங்கம் யாழ் உதை பந்தாட்ட லீக்கின்கீழ் இயங்கி வருகின்றது. அவ்வாறு சங்கங்களில் இணைக்கப்படாத மத்தியஸ்தர்கள் மத்தியஸ்தர் சங்கங்களில் இருந்து நீக்கப்படுவார்கள் எனவும் இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எமது சங்கம் தாய்ச் சங்கத்தில் இணைந்து கொண்டதின் பயனாக சங்கத்தலைவர் திரு. இ. க. குமரையா தற்போது இலங்கை உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப தலைவராகவும் மத்தியஸ்தர் விரிவுரையாளராகவும் பரீட்சை ஆணையாளராகவும் விளங்கிக் கொண்டு இருக்கிறார். என்பதை பத்திரிகை வாசிப்பவர்கள் நன்கு அறிவார்கள்.

1986 இல் யா. உ. லீக் செயலற்று இருந்த சமயத்தில் இ. உ. ம. ச. ஒழுங்கு விதிகளுக்கமைய யா. உ. லீக்கிற்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியவில்லை. இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி ஒரு சிலர் பயன்பெற முயன்றதும், அவர்கள் கதிர்பார்த்த அளவு பயன்தராமல் போனதுமல்லாமல் குறுகிய நாலத்தில் அவர்கள் முயற்சி பிசுபிசுத்து போனமையும் ாடறிந்த உண்மை.

எமது சங்கம் இ. உ. ம. சங்கத்தினூடாக வருடாவருடம் மத்தியஸ்தர் பரீட்சைகளை நடாத்தி வருவதைச் சகலரும் அறிவார்கள். வருடாவருடம் எமது சங்கத்தில் இருந்தே இலங்கையில் மிகக் கூடுதலான மத்தியஸ்த்தர்கள் சித்தியடைந்து வருகிறார்கள் என்பதையும் தற்போது 62 மத்தியஸ்தர்கள் எமது சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்பதையும் கூறுவதில் பெருமையடைகிறோம்.

எனவே 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேர்ஊன்றி நிற்கும் எமது சங்கம் அதன் 40 வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடியது தவறு, என்று கூறுவதுதான் தவறு, என்று எமது சங்க ஆட்சிக்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

எஸ். கிளிபேட்
(செயலாளர் யா. உ. ம. சங்கம்)

### வாக்குறுதிகள் காற்றேடு போயின!

# தண்ணீரும், மின்சாரமும் இல்லை கப்பூது எப்போதும்....?

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கப்பூதுப் பிரதேச மக்கள் குடிநீர், மின்சார வசதி இன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் இப்பகுதி மக்கள் நன்னீருக்காக நீண்ட தூரம் நடந்து விராலி மடத்தை நோக்கி நடை பயின்று வருவதாகவும், மின்சாரம் இன்மையால் நள்ளிரவு வேளைகளில் இப்பகுதிகளில் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருப்பதோடு மாணவர்கள் கல்வி கற்பதற்கும் தடங்கலேற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பாராளுமன்ற தேர்தல்களின் போது இவற்றை நிவர்த்தி செய்வோமென வாக்குறுதிகள் வழங்கிய போதிலும் அவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லையென இப்பகுதிப் பிரமுகரொருவர் தெரிவித்தார். (44)

### 200 மில்லியன் டாலர் செலவில்

# யாழ், மன்னார், திருமலை புதிய தொலைபேசி சேவை

புனரமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் வட-கிழக்கு மாகாணத் தொலைத் தொடர்புச் சேவையைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான வேலைத் திட்டம் குறித்துப் பூர்வாங்க ஆய்வு வேலைகளை மேற்கொள்வதற்கென மூன்று டென்மார்க் நிபுணர்கள் தற்போது யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ளனர்.

பிரதம தொலைத் தொடர்புப் பொறியியல் நிபுணரான ஜோன்லவ்கர் தலைமையில் சில தினங்களுக்கு முன்னர் மூவர் கொண்ட இக் குழு வவுனியாவுக்குச் சென்று தற்போதுள்ள தொலைபேசித் திட்ட முறையைப் பார்வையிட்டதுடன் உத்தேச திட்டத்திற்குரிய ஆலோசனைகள் பற்றியும் ஆராய்ந்தனர்.

பின்னர்யாழ்ப்பாணம் வந்த இக்குழுவினர் புதிதாகஅமைக்கப்பட வேண்டிய பரிவர்த்தனை நிலையம் தொடர்பான பொதுவேலைகள் இடங்கள் என்பன பற்றிப் பார்வையிட்டனர்.

இவர்களுடன் வட-கிழக்கு மாகாணத் தொலைத் தொடர்புப் பகுதி அத்தியட்சகர் திரு. எஸ். கனகசூரியரும் வந்திருந்தார்.

தற்போது இக் குழுவின் நிபுணர்களில் ஒருவரான வெளிக்கள நிலையப் பொறியியலாளர் வேர்ணர் வெஸ்ட் ஜெக்கப்சன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நிலைமைகள், திட்டங்கள் பற்றி ஆராய்ந்து வருகிறார்.

இதே வேளையில் பரிவர்த்தனைப் பொறியியலாளர் ஜோர்கன் புரோடர்சன் திருகோணமலையிலும், ஜோன் லங்கர் மன்னாரிலும் இத் திட்டம் பற்றி ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

சில தினங்களில் இந்த நிபுணர்கள் மட்டக்களப்பு உட்படத் தமது ஆய்வு வேலைகளை முடித்துக் கொண்டு கொழும்பில் கூடி இறுதி முடிவுகளை மேற் கொள்ளவிருப்பதாகப் புரோடர்சன் தெரிவித்தார்.

சுமார் 200 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப் பட்டுள்ள இத் திட்டத்திற்குரிய நிதிக் கொடைகளில் ஒரு பகுதியை டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகள் வழங்க முன் வந்துள்ளன.

இதே வேளை இப் புதிய திட்டம் செயற்படுத்தப் படுவதற்கு முன்னர் யாழ். திருகோணமலை மாவட்டங்களுக்குத் தலா 500 தொலைபேசி இணைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கானவேலைகளும் நடைபெற்றுவருகின்றன.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் இதனைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப் பட்டிருந்தது.

எனினும் வடக்கில் துணுக்காய், கிழக்கில் புல்மோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பரிவர்த்தனைக்கோபுரம் மற்றும் கட்டிடப் புனரமைப்பு வேலைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் கராணமாக இவ்வேலைகள் பூர்த்தியடைவதும் தாமதமாகும் என்று தெரிவிக்கப் படுகிறது.

இதற்கிடையில் முல்லைத் தீவு மாவட்டத்திற்கு 50 தொலைபேசி இணைப்புக்களை உடனடியாக வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதற்கென முல்லைத்தீவு தபால் அலுவலகத்தில் கிளை 'எக்ஸ்சேஞ்ர்' ஒன்று ஆரம்பிக்கப் பட்டு அதன் ஊடாக வெளியூர் அமைப்புக்களுக்கான வசதி செய்யப்படும் எனவும் அறிய வந்துள்ளது.

### அலை அரசி படகு காரைநகரில் இருந்து

ஊர்காவற்றுறையிலிருந்து குறிகட்டுவான் வரை செல்லும் அலை அரசி படகுச் சேவை தற்போது காரைநகர் துறைமுகத்திலிருந்து சேவையிலீடுபடுகிறது.

ஊர்காவற்றுறையிலுள்ள இறங்குதுறைப் பாலம் உடைந்து சேதமடைந்திருப்பதால் படகு அங்கு நிறுத்த முடியவில்லையென அறியப் படுகின்றது. (ப.3)

### கரவெட்டியில் நீண்டகாலத்தின்பின் மாலைத் திருவிழா

கரவெட்டி செல்லன் விநாயகர் ஆலயத்தில் நீண்டகால இடைவெளிக்குப்பின் இம்முறை மாலைத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

கடந்த காலங்களில் இவ்வாலயத்திற்கருகாமையில் இலங்கை இராணுவமும், தொடர்ந்து, இந்திய இராணுவமும் நிலை கொண்டிருந்ததனால் இவ்வாலயத்தில் திருவிழாக்கள் மிக எளிமையாகக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (44)

### வட ம. கிழக்கில் சுகாதார நிலையம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கட்டைகாடு ஆளியவளை ஆகிய கிராமங்களில் இரண்டு கிராமோதய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இரண்டு நிலையங்களை இக்கிராமங்களில் அமைப்பதன் மூலம் இப்பகுதியிலுள்ள பிரசவ தாய்மார்கள், குழந்தைகள் தங்கள் கிராமங்களிலேயே வைத்திய சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (18)

### யூன் 5க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

# திறந்த பல்கலைக்கழகத்தில் வணிகமுகாமைத்துவ நெறி

(கொக்குவில்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் சிறு வணிக, முகாமைத்துவக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ளன. எதிர் வரும் 10ம் திகதி முதல் அதற்கான விண்ணப்ப படிவம் விநியோகிக்கப்படும்,

பயில விரும்புபவர்கள் 25 ரூபா பெறுமதியான காசுக் கட்டளையுடன் யாழ் பிராந்திய நிலையத்திற்கு நேரில் சென்று படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி யூன் மாதம் ஐந்தாம் திகதியாகும்

காசுக்கட்டளை பதிவாளர் இலங்கை திறந்த பல்கலைக் கழகம், நுகேகொட என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். (ப7)

## சுவையான செய்திகள்

### பெண்ணுக்கு இளநீர்க் குளிப்பு

கோவா மாநிலத்தில் நடக்கும் திருமணங்களில் திருமணத்திற்கு முதல் நாள் மணமகளுக்கு மிகவும் வித்தியாசமான நாளாகும். அன்று மணமகளைத் தயார் செய்யும் நன்னாளாகும்.

சுமார் 300 இளநீர்களைச் சீவி அதன் தண்ணீரைப் பெரிய அண்டாவில் பிடித்து மணமகளை அதில் தான் குளிப்பாட்டுவார்களாம்.

### ரோஜா... கறுப்பு ரோஜா

ரோஜாவில் பல நிறங்களைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் கறுப்பு ரோஜாவைக் கண்டதுண்டா? அழகும், மணமும் கொண்ட கறுப்பு ரோஜா ஜெர்மன் நாட்டில் இருக்கின்றதாம். அங்குள்ள ரோஜா மலர்த் தோட்டத்தில் 6,000 ரக ரோஜா மலர்களைத் தரும் செடிகள் இருக்கின்றனவாம். அதில் கறுப்பு ரோஜாக்கள் தான் அதிகமாம். ஜெர்மனியப் பெண்களும் அதைத் தான் அதிகமாக விரும்புகின்றார்களாம்.

### தவளைத் திருமணங்கள்

அஸ்லாம் மாநிலத்தில் ஒரு விசித்திர நம்பிக்கை இருக்கின்றது. மழை இல்லாமல் பஞ்சம் வந்து விட்டால் மழை பெய்ய வேண்டும் என்பதற்காக இரண்டு தவளைகளுக்குத் திருமணம் செய்து வைத்து விடுகின்றார்கள். அதற்காக பொது மக்களிடம் நிதி திரட்டி விமரிசையாகத் தவளைத் திருமணங்கள் நடக்கின்றன.

# இன்று நாள் எப்படி?

மேடம்: உடல்ரோகம், பணச் செலவு, வாகன மாற்றம், புண்ணிய வழிபாடு, புதுத் தொழில்.

இடபம்: தேடியவர் வருகை, வாக்கு பலிதம், உயர் பதவி, உத்தமர்களுறவு.

மிதுனம்: மங்கள காரிய நிறைவு, வாகன சுகம், திடீர்ப் பிரயாணம், தேடியவர் வருகை.

கடகம்: புத்திரவழி சுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், இலட்சுமி கடாட்சம்.

சிங்கம்: புகழ்தேடி வரும், பணப் புழக்கம், கடற் தொழில் இயந்திரத் தொழில் இலாபம்.

கன்னி: தேடியவர் வருகை, வாக்கு பலிதம், உயர் பதவி, கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி.

துலாம்: உடல் ரோகம், இராஜ பயம், வாகன நஷ்டம், தூரத்து பிரயாணம், தேடியவர் வருகை.

விருச்சிகம்: மனச்சஞ்சலம், விவாகத்தடை, வீண்செலவு, இனப்பகை, பெரியோராசி,

தனுசு: புத்திர கவலை, வாகன மாற்றம், பெரியோர் வருகை, தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

மகரம்: தேடியவர் வருகை, பணவரவு, வணிகர்கள் இலாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

கும்பம்: திடீர்ப் பிரயாணம், வாக்கு பலிதம், இயந்திரத் தொழில் கடற் தொழில் மூலம் மகிழ்ச்சி.

மீனம்: தெய்வ ஆசி, தேடியவர் வருகை, வாகன சுகம், பணப் புழக்கம், உயர் பதவி, இராஜமரியாதை.

யாழ் சோதிடர்
ச. அரியநாயகம்

# சுதந்திரக் கட்சிக்குள் சிக்கல்

தேசிய பட்டியல் மூலம் புதிய முகவர்களை பாராளுமன்றத்திற்கு கொண்டு வர கட்சித்தலைமைப்பீடம் முயல்வதைத் தொடர்ந்து சிறி. ல. சு. கட்சியின் உயர் மட்டங்களில் புதிதாகச்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இந்தமுயற்சியில் இப்பொழுது பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கும்டாக்டர்மேர்வின் டி. சில்வா, டாக்டர் கமல் கருணநாயக்க, முன்னாள்நீதி அமைச்சர் டபிள்யூ ராசரத்தினம் திரு எல். ஓ பி. பெரேரா திரு.சோமசாரதச நாயக்க ஆகியஇருவரு டபுதியவர்களுக்கு இடம் கொடுப்பதற்காக ராஜினாமா செய்யும்படி கேட்டுக் கொள்ளப் படுவார்கள் என நம்பப்படுகின்றது ராஜினாமாச் செய்யத் தயங்கும் எம். பீக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதோடு இவர்கள் சட்ட ஆலோசனைகளையும் பெற்றுள்ளார் என தெரிய வந்துள்ளது.


# தொழிற் பயிற்சிகள்

★ **றேடியோ ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**
ரெலிவிசன், றேடியோ. வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:— 4 மாதம்

★ **ஏயர் கொண்டிசனிங்**
குளிர்சாதனப்பெட்டி, ஏயர் கெண்டிசன் திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்:-- 4 மாதம்

★ **றீவைண்டிங்**
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர், ஆமேச்சர் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:– 3 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:-- 2 மாதம்

★ **Spoken English**
ஒருமாத முழுநேர வகுப்பு நடாத்தப்படும்.

★ **Hotel Management**
மீண்டும் ஆரம்பம் 11.05.1990 (கிழமை நாட்கள்)
12.05.1990 (சனி, ஞாயிறு)

விபரங்களிற்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவையருகாமை)
05072


# பெனாஸிரின் கணவர் மீது
# பெரும் ஊழல் குற்றச்சாட்டு

## நான் நிரபராதி என்கிறார் அவர்


ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டுவதற்கான 8 இலட்சத்து 80 ஆயிரம் டாலர் நிதி திருடப்பட்டது பற்றிய ஊழலில் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிரின் கணவரான அஸிப் அலிப் சர்தாரி சம்பந்தப்பட்டிருந்தாரா?

எதிர்க்கட்சிகள் தன் மீது சுமத்திய இக்குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

இக்குற்றச்சாட்டுகள் பொய்யானவை, அவர்கள் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லட்டும் நீதி விசாரணைக்கு நான் தயாராக உள்ளேன் என்று அவர் கூறினார்.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளஅவர் அங்கு வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே இம்மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

## 10, 11, 12, 13 -ம் திகதிகளில்
# பாண்டிச்சேரியில் கம்பன் விழா
# யாழ் பிரதிநிதிகளும் பங்கு பற்றுவர்



இம் மாதம் 10, 11, 12, 13 ஆகிய தினங்களில் தென்னிந்திய மாநிலமான பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் பங்கேற்கும் பொருட்டு அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் எழுவர் கொண்ட குழுவொன்று இந்தியா சென்றுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொள்ளும் குழுவினரில் அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, முரசொலி ஆளுநர் திரு. ம. சிவராசா, தம்பதிகள் கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன், செ. மகாராஜா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தென் இந்தியாவின் பிரபல பேச்சாளர்களும் கவிஞர்களும் கல்விமான்களும் சுவைஞர்களும் கலந்து கொள்ளும் விழாவில் முதலமைச்சர் மு. கருணாநிதியும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்

பதினொராம்திகதி வெள்ளி காலை 11.30க்கு நடைபெறும் நிகழ்ச்சியின் போது செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிசிறப்புரை வழங்குவார்.

அனறைய தினம் மாலை நிகழ்ச்சியின் போது இடம் பெறும் உரை மன்றத்தில் கம்பன் ஒரு புரட்சிக் கவிஞன்' என்ற தலைப்பில் அரசியல் புரட்சி பற்றி அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு, இ. ஜெயராஜ் உரை நிகழ்த்தவுள்ளார்.

13ஆம் திகதி இடம் பெறவுள்ள முதல் நாள் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு நிகழ்ச்சியின்போது நோக்கங்கள்' சார்பில் அமைப்பாளர் இ ஜெயராஜ் வாதிடவுள்ளார்

# வல்வை மாதர் சங்க நிர்வாகிகள்

(வல்வை)

வல்வை முத்துமாரி மாதர் ஐக்கிய நாணய சங்கத்தின் 3-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் வல்வை கடந்த மாதம் வல்வை விக்னேஸ்வரா சன சமூக சேவா நிலையமண்டபத்தில் தலைவர் திருமதி வெ. கங்காதேவி தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் பின் வருவோர் நடப்பு வருட நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: திருமதி ந. கலாநிதிதேவி, உப-தலைவர் திருமதி மா. புஷ்பேந்திரராணி: செயலாளர்: திருமதி அ. பத்மலோசனா, பொருளாளர் திருமதி: சி. பிறேமலதா, உறுப்பினர் திருமதி வெ. கங்காதேவி, செல்வி பா, விஜயாதேவி, திருமதி செ. விஜயராணி,

சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்படும் சிறுவர் பாடசாலைக்கு ரூபா 94,000/- செலவில் ஒரு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கான தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது,

# பிறிபேக்கில் அறவழி ஆய்வரங்கு

(மட்டுவில்)

சுவிசில் உள்ள பிறிபேக் எனும் இடத்தில் அறவழிப் பத்திரிகை ஆய்வரங்கு அண்மையில் நடைபெற்றது சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் சுவிஸ் நாட்டுப் பிரதிநிதிகளான திரு திருமதி றோமோன் தம்பதிகள் இவ் ஆய்வரங்கில்பிரதம விருந்தினராக்கலந்து கொண்டனர்.

## யாழ் மாவட்ட பாடசாலைகளின்
# மெய்வல்லுநர் போட்டி 16, 17இல் இடம் பெறும்

யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் மே 16 17ம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கோட்டமட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர் 1000 போட்டிபாளர்களுக்குமேல் பங்கு பெறும் இப்போட்டிக்கான ஆயத்தங்களை யாழ் கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்ச்சியில் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு.இரா. சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்பணிப்பாளரின் பாரியார் திருமதி தேவராயி சுந்தரலிங்கம் அவர்கள் பரிசில்கள் வழங்குவார்.

யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றும் வீரர்களுக்குரிய இலக்கங்கள் எதிர்வரும் 11.05.90 காலை 9.30 மணிக்கு அவர்களது பாடசாலைகள் அமைந்த கோட்ட அலுவலகங்களில் கொடுக்கப்படும்.

பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் போட்டியாளர்களது பிறப்புச் சான்றிதழ்களையும் அறிமுகஅட்டையையும் சமர்ப்பித்து இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும்படி கல்வி அதிகாரி (உடற்கல்வி) திரு.த. அருணகிரிராஜா கேட்டுள்ளார்.(03)

# அருள் புரிவாய் நாகபூசணியே

சங்கம் புகழ் சேர் சண்டிலிப்பாய் தனிலே
எங்கள் உயர்வினுக்காய் இனிதே உறைந்திடும்
மங்கள நாயகியே சீரணி நாக பூசணியே
செங்கமலம் போல திகழும் வதனமுடன்
தங்குமருள் பொலிவாகத் தரணியைக் காத்திடுவாய்
அங்கங் குளிர்ந்திடவே அடி தொழுதிடுவோம்
பொங்கு நற் கருணையினைப் போற்றிடவே
இங்கிதமாய் எமக்கு நீ இன்பந் தருவாயே

எஸ். சிந்துஜா

(இன்று புதன்கிழமை சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் இரதோற்சவம்)

# மலையக தமிழர் திருப்பி அனுப்பும் முயற்சிக்கு வி. பு. ம. மு. கண்டனம்

ஒரு லட்சம் மலையகத் தமிழர்களை கட்டாயமாக நாடு கடத்தும் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஆட்பேனையும் கண்டனமும் தெரிவிக்கின்றது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள அனைவரும் இலங்கையின் குடி மக்களே இவர்கள் அனைவருக்கும் இந்நாட்டில் குடியுரிமை உடனடியாக வழங்கப்படவேண்டும்.

இவர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் திட்டத்தை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று எமது கட்சி கேட்டுக் கொள்கின்றது.

மலையகத்தில் இன்று வாழ்பவர்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள் இவர்கள் மட்டுமல்ல இவர்களுக்கு முந்திய இரண்டு அல்லது மூன்று தலைமுறையினர் சொந்த மண்ணில் பிறந்தவர்களே.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்நாட்டை சுரண்டவரவில்லை எத்தனையோ சொல்லொணா இனப்படு கொலைகளுக்கும் மத்தியில் இந்த நாட்டை வளமாக்கிய மக்கள் இவர்கள் தாமாக விரும்பி இந்தியா செல்லவில்லை இந்தியா செல்ல கட்டாயப் படுத்தப்பட்டார்கள்.

இவர்களை திருப்பியனுப்ப செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த மக்களை கலந்து ஆலோசிக்காமலே செய்யப்பட்டன.

ராஜீவ் ஜே.ஆர் ஒப்பந்தம் செயழிழந்து செத்தது போன்றே இந்த பழைய ஒப்பந்தங்களும் செல்லுபடியற்றவை இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த மக்களில் ஒரு பகுதியினரை இந்தியா செல்லுமாறு வற்புறுத்துவதை எமது கட்சி வன்மையாக கண்டிக்கின்றது.

## தமிழகத்தில் புலிகளின் ஆதிக்கம் இருப்பதாக கூறுவது கடைந்தெடுத்த பொய் - கருணாநிதி

(சென்னை)

தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே மோதலை உண்டாக்கும் முயற்சி நடைபெறுகிறது.இது தொடர்பாக மத்தியபுலனாய்வுத் துறையான 'றோ' மீது பிரதம மந்திரி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்''

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தமிழக சட்டசபையில் பேசுகையில் மேற்கண்டவாறு கோரிக்கைவிடுத்தார்.

'றோ' பற்றி தமிழக முதலமைச்சர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருப்பது அரசியல் அவதானிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது

மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே மோதலை உருவாக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் பொய்ப்பிரசாரம் செய்வதாகக் கூறிய முதலமைச்சர் எந்த தீவிரவாதத்தையும் தமிழகத்தில் அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியகச் சொன்னார்.

''தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதாகச் சொல்லப்படுவது கடைந்தெடுத்த பொய்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இப்போது தமிழகத்தில் எந்தப் பயிற்சி முகாம்களும் இல்லை'' என்று தெரிவித்த அவர் 'முகாம்அமைதிருந்தவர்களைக் கைது செய்துவிட்டதாகவும் சொன்னார்.

## சட்டவிரோத மின்பாவனை வன்னியில் புலிகள் நடவடிக்கை

வவுனியாவில் சட்டவிரோதமாக மின்பாவனை அதாவது ''கள்ளக் கரண்டு''எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபையின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாக ஏற்படுத்தப்பட்ட மின் இணைப்புக்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அனைவரும் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (11)

## காரைநகரில் கொள்ளை முயற்சி

காரைநகர் களபூமியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சியொன்று இளைஞர்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முந்தினம் இரவு அ.நவரத்தினம் என்பவரது வீட்டினுள் புகுந்த இருவர் அங்கிருந்தவர்களின்நகைகளை கொள்ளையடிக்க முயன்றபோது அங்குவந்த இளைஞர்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர். தற்போது இவர்கள் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

(03)

## ஈரோஸ் புதிய எம். பி.

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 1988-ம் வருட் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கனகரத்தினம் வரதராஜா என்பவரின் இடத்திற்கு திரு. பொன்னுத்துரை சுகுமார் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்,

இதனைத் தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அரசாங்க வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார்.

திரு. சுகுமார் இம்மாவட்டத்தில் திரு. வரதராஜாவுக்கு அடுத்தபடியான வாக்குசளைப்பெற்றிருந்தார். இவர்கள் இருவரும் சுயேச்சைக்குழு (ஈரோஸ்) சார்பில் போட்டியிட்டவர்கள்.

## சிரித்திரன் சித்திரக்கொத்து

எஸ். சிவஞானசுந்தரத்தின் (சுந்தர்) ''சிரித்திரன் சித்திரக் கொத்து'' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழன் மாலை மூன்றரைக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

### பத்மநாபாவை...

யிருக்கும். ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் கே.பத்மநாபாவை சந்தித்து இவர் ஆலோசனை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் கொழும்பில் புளொட், டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடனும் அரசுடனான பேச்சு வார்த்தை தொடர்பாக ஈ. பி. ஆர், எல். எவ் ஆலோசனை நடத்திவருகின்றது.

அரசாங்கத்துடன் நடைபெற இருக்கும் இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு நாட்டுக்கு வெளியே இருக்கும் பல ஈ.பி.ஆர்.எல் எப் முக்கியஸ்தர்கள் சிலர் கெழும்பு வரவுள் ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### விடுதிகள்...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது என அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார். மட்டக்களப்பு எம்.பி சாம் தம்பிமுத்துவின் கொலை தொடர்பாக பொலிஸார் பக்கச் சார்பற்ற முறையில் விசாரணை நடாத்தி வருகின்றனர் என செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

கொழும்பில் தொழில் ஏதும் புரியாது இருப்பவர்களை வைத்திருக்கும் விடுதிகள் மீதும் கண்காணிப்பை பலப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு இணை அமைச்சர் சொன்னார்.

### வவுனியா...

சச்சரவின் காரணமாக தமிழ் றிசேவ் பொலிஸ் இருவர் பெரும்பான்மை சமூகத்தினைச் சேர்ந்த பொலிசாரினால் தாக்கப்பட்டார்களாம்.

ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ் றிசேவ் பொலிசார் இருவரும் மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பினைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.(11)

### 500 ரூபா...

படுத்தப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கைதான இருவருள் ஒருவர் தமிழர் மற்றவர் பறங்கியர்.

இவர்கள் கொழும்பிலும் தெஹிவளையிலும் வசிப்பவர்கள்.

இரகசியப் பொலிஸார் விசாரனைகளை தொடர்ந்து தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

## சாம் தம்பிமுத்துவை கொலை செய்த கோலையாளிகளை அடையாளம் காட்ட பொலிஸ் கோரிக்கை

மட்டக்களப்பு எம். பி.சாம் தம்பி முத்துவை கொலை செய்தவர்களை அடையாளம் காட்ட முடியும் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்றபோது அடையாளம் காணப்பட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளரை கண்டு பிடிக்க முடியாது இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் கொலையாளிகளை அடையாளம் காட்ட தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடம் ஆரமபமாகும்

சுமார் 14 கோடி ரூபா செலவில் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு இதற்காக 2 கோடி ரூபாவை செலவிடும்

இதற்கு முன்னோடியாக ஆய்வுக் கூடம் அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு லருகின்றன

## யாழ் பல்கலைக் கழகத்தில் ரோபல் வகுப்பு ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழகத்தில் ரோபல்(TOFEL) வகுப்புகள் முதன் முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து கோரப் பட்டுள்ளன. ரோபல் வகுப்புகள் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும்.(03)

## 12 மைல் மரதன் ஓட்டம் வலது குறைந்தவரும் பங்கு

(உருத்திரபுரம்)

சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று நடாத்தப் பட்ட 12 மைல் மரதன் ஓட்டப்போட்டியில் கை இழந்த ஒருவர் பன்னிரெண்டாவது இடத்தைப்பெற்று சாதனை புரிந்துள்ளார்.

சரவணையைச் சேர்ந்த இராமர்விநாயகன் என்பவரே இச்சாதனையைப் புரிந்து பலரினதும் பாராட்டைப் பெற்றவராவார்.(ப 6)

## தபால் அதிபர் பதவி வெற்றிடம்

கொழும்புத்துறை உபதபால் அலுவலக உபதபால் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இம்மாதம் 24ம் திகதிக்கு முன்பு இவ் உபதபால் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (36)

## யானைகள் அட்டகாசம்

துணுக்காய்ப் பகுதியில் உள்ள வினாயகபுரம் நாலம் பகுதியில் யானைகள் அட்டகாசம் தற்போது அதிகரித்து வருகிறது. இரவில் யானைகள் வீடுகளுக்கு அருகிலும் நடமாடுவதால் இப்பகுதி மக்கள் பீதியுடன் இரவில் வாழ்கின்றனர். (ப.8)

## ஈ.ழ விவசாயிகள் கழகம் அங்குரார்ப்பணம்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரிவுகளின் கீழ்அமைக்கப்பட்ட ஒவ்வொரு சிற்றூரவையினாலும் விசேடமாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளை ஒன்று சேர்த்து தமிழ்ஈழ விவசாயிகள் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இவ்வைபவம் இம்மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் மேற்படி வைபவம் இடம் பெறும். (ப.4)

## சிகிரியா ஹெலி விபத்து இயந்திரக் கோளாறு காரணம்

சிகிரியாவுக்கு மூன்று மைல் தொலைவில் இடம்பெற்ற விமான விபத்திற்கு விமானத்தைச் செலுத்தியவர் காரணம் இல்லை எனவும், விமானத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறினாலே இந்த விமானம் விபத்திற்கு உள்ளாகியது எனவும் விமானப்படைத் தளபதி ஏயர்மாசல் ரெறன்ட் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பல வதந்திகளும் சந்தேகங்களும் நிலவுவதால் உத்தியோகபூர்வ அறிக்கை கிடைத்தும் உண்மையான நிலைவரத்தை அறியக்கூடியதாக இருக்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

## கடைகளை மூடவும்

இன்றும் நாளையும் சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு சகல வர்த்தகர்களையும் யாழ் வர்த்தக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 09-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது